எடுக்கும். படித்தவர்கள், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்காகத்தான் அந்த விதிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, காண்ட்ராக்டர்களுக்குச் சலுகை அளிப்பதற்காக அல்ல. அந்த விதிமுறையை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற புகார் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தகவல் கொடுக்கலாம். அப்படிப்பட்ட காண்ட்ராக்டர்களை லிஸ்டிலேயிருந்து 'ரிமூவ்' செய்துவிடலாம். அவர்களை லிஸ்டிலே வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.

THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, I find that some contractors call themselves Engineering Contractors, while others call themselves mere contractors. May I know whether there is any distinction officially between these two sections of contractors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேராசிரியர். அதுபற்றி அவர் விளக்கங்கள் சொன்னால், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

State Minor Ports Fund, State Landing and Shipping Funds and State Pilotage Funds

* 57 Q.—THIRU V. ISVARMURTHI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the total amount available as on date at (1) the State Minor Ports Fund, (2) the State Landing and Shipping Funds and (3) State Pilotage Funds; and

(b) the sources of income for these funds?

மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில இறக்குமதி--ஏற்றுமதி நிதி, மாநில மாலுமிகள் நிதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, (2) மாநில இறக்குமதி—ஏற்றுமதி நிதி, (3) மாநில மாலுமிகள் நிதி ஆகியவற்றில் இன்றைய நிலவரப்படி உள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

1973 பிப்ரவரி 7]

(இ) இந்நிதிகளுக்கு எந்தெந்த வாயில்களிலிருந்து வருவாய் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) விவர அறிக்கை @ மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்த நிதிகள் துறை முகங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றனவா அல்லது பொது நிதிக்குச் சேர்க்கப்படுகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நிதி துறைமுகங்கள் வளர்ச்சிக்குத் தான் பயன்படுகிறது. அந்தந்தத் துறைமுகத்தின் பணமானது அந்தந்தத் துறை முகத்தில் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. பொது நிதியில் சேர்க்கலாமென்று ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குளச்சல் துறைமுகத்திற்கு 1,31,650 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எவ்வளவு தூரம் செலவாகியிருக்கிறது, எஞ்சிய தொகை எவ்வளவு இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்போது துறைமுகங்கள் கையில் இருக்கப்பட்ட தொகைதான் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகப் பணம் காட்டப்படவில்லை. அதைப்பற்றிக் கேள்வி எழவில்லை. தூத்துக்குடி பணம் 1,56,49,000 ரூபாய் இருக்கிறது.

Loan for Sprinkler Irrigation

* 58 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether instructions have been issued by the Government to the Land Development Banks to issue loans for Sprinkler Irrigation Units; and

(*b*) if so, the details thereof?

@ 312–313 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.